டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 104 - Madurai | Online Edition

## சரக்கு மற்றும் சேவை வரிக் குறைப்பு

# கர்நாடகாவில் காபித் தோட்டங்கள் முதல் தொழில்நுட்ப மையங்கள் வரை பலனளிக்கிறது

புது தில்லி, அக்.25

சரக்கு மற்றும் சேவை வரி மறுசீரமைப்பு நடவடிக்கை இந்தியாவின் 71 சதவீத காபியை உற்பத்தி செய்யும் கர்நாடகாவுக்கு ஊக்கமளித்துள்ளது. காபி எக்ஸ்ட்ராக்ட், எசன்ஸ் மற்றும் இன்ஸ்டன்ட் காபி ஆகியவற்றின் மீதான சரக்கு மற்றும் சேவை வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால், சிறு விவசாயிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பலன் அடைகின்றனர்.

வரி குறைப்பால் பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 26 லட்சம் விவசாயிகளும் பயனடைய உள்ளனர். அவர்கள் உற்பத்தி செய்யும் பால் மற்றும் பன்னீர் மீதான சரக்கு மற்றும் சேவை வரி முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது. நெய் மற்றும் வெண்ணெயின் விலை 5 முதல் 7 சதவீதம் குறையும்.

கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் விளையும் முந்திரி, தென்னை நார் மற்றும் கடல் உற்பத்திப் பொருட்களுக்கு வரி 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளதால் பெண்கள் தலைமை யிலான குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களும் கடலோர வாழ்வாதாரத்தை நம்பியுள்ள மக்களும் பயனடைகின்றனர்.

டிராக்டர்கள், இயந்திரங்கள், சிமெண்ட், கிரானைட் ஆகியவை 6 முதல் 8 சதவீதம் விலை குறைந்துள்ளதால் தொழிற் துறையினரும் இந்த சாதனங்களை பயன்படுத்தும் விவசாயிகளும் பயனடைகின்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# இந்திய விதை வங்கி - ஒரு பார்வை




பணத்தை சேமிக்கும் வங்கி, இரத்தத்தை சேமிக்கும் வங்கி, ஸ்டெம் செல் சேமிக்கும் வங்கி என இவற்றை தான் நாம் கேள்விப் பட்டிருப்போம். ஆனால், நம்மில் வெகு சிலர் மட்டுமே இந்திய விதை வங்கியை அறிந்திருப்போம்.

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிரினத்தின் ஆணிவேரும் இயற்கை தான். அந்த இயற்கைக்கு அழகு வனம். நாம் சுவாசிக்க வனத்தின் பங்கு மிக முக்கியமானது. அந்த வனத்தை உருவாக்க விதை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த விதைகளை சேமித்து வைத்திருக்கும் வங்கி தான் 'இந்திய விதை வங்கி'.

இது லடாக் யூனியன் பிரதேசம் இமாலய மலை தொடரான சங் லா எனும் இடத்தில் தரை மட்டத்திலிருந்து சுமார் 17,586 அடி உயரத்தில் உள்ளது. இதனை டிஆர்டிஓ-ன் அதி உயர ஆராய்ச்சி பாதுகாப்பு நிறுவனம் மற்றும் தேசிய தாவர மரபணு வளங்கள் மையம் இணைந்து 2010 ஆம் ஆண்டு உருவாக்கியுள்ளது. இதனை உலகின் இரண்டாவது விதை வங்கி என்பர்.

ஏறத்தாழ 5000-க்கும் மேற்பட்ட விதைகளை -4°C கீழ் அங்கு சேமித்து வைத்துள்ளனர். இயல்பாகவே அங்கு வெப்பநிலை மிக மிக குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது. எப்போதாவது இந்திய பாரதத்துக்கு போர் அல்லது பேரழிவு ஏற்படும் போது இந்த விதை வங்கியில் இருந்து விதைகளை எடுத்து வேளாண் செய்யலாம் என்ற உயர்ந்த நோக்கத்தில் ஒன்றிய அரசு இதனை உருவாகியுள்ளது. இங்கு பாரம்பரிய விதைகளும் பாதுகாக்கப் படுகின்றன.

தகவல் : **க.பாலாஜி (இளநிலை வேளாண்மை), முன்னாள் முதன்மை செயல் அலுவலர் (FPCL).**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி

கோயம்புத்தூர், அக்.25

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மசாலா பொடிகள் மற்றும் ஊறுகாய்கள் தயாரிப்பு பயிற்சி 28.10.25 மற்றும் 29.10.25 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை வழி), கோயம்புத்தூர் – 641 003ல் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- மசாலா பொடிகள் (சாம்பார் பொடி, ரசப்பொடி, கறிமசால் பொடி, பருப்பு பொடி, சிக்கன் 65 மசாலா பொழி)
- தயார் நிலை பேஸ்ட்
- காளான் ஊறுகாய்
- வாழைப்பூ ஊறுகாய்
- பாகற்காய் ஊறுகாய்
- கத்தரிக்காய் ஊறுகாய்
- வெங்காய ஊறுகாய்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/– (ரூ.1,500 + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003, தொலைபேசி எண் : 94885 18268, 0422 6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வரப்பு ஓரங்களில் நடவு செய்ய ஆடாதொடா, நொச்சி செடிகள் இலவசம்




புதுக்கோட்டை, அக்.25

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டார விவசாயி களுக்கு வரப்பு ஓரங்களில் நடவு செய்ய ஆடாதொடா மற்றும் நொச்சி செடிகள் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் இலவசமாக வழங்கப்படுகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நிஷா பேகம் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது, இயற்கை பூச்சி விரட்டிகளான இது போன்ற செடிகளை வளர்த்து இராசயன பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை குறைப்பதோடு மண் வளத்தைப் பெருக்கி சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கலாம். மேலும், இந்த வகையான பூச்சி விரட்டி செடிகள் மூலிகை குணம் மற்றும் அதிக கரிமச் சத்துக்களை கொண்டதாகும். ஆடாதொடா மற்றும் நொச்சி இலைகள் இயற்கை பூச்சி விரட்டியாக மட்டுமில்லாமல் வேலி பயிராகவும் பயன்படுத்துவதன் மூலம் பூச்சி நோய்களை வருமுன் தடுக்க முடியும். சாகுபடி செலவும் பெருமளவு குறையும்.

நடப்பாண்டில் 1500 ஆடாதொடா மற்றும் நொச்சி செடிகள் பொன்னமராவதி வேளாண்மை விரிவாக்க மையக் கிடங்கில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயிக்கு 50 கன்றுகள் வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் அட்டை நகல் கொடுத்து செடிகளை பெற்றுக் கொள்ளலாம். தற்போது பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் உடனடி யாக நடவு செய்து பயன்பெறுமாறு பொன்னமராவதி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# ரூ.14.90 இலட்சம் மதிப்பிலான விதைக்குவியலுக்கு விற்பனை தடை

ஈரோடு, அக்.25

விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு இயக்குநரின் ஆணைக்கிணங்க, கரூர் மற்றும் ஈரோடு மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர்கள் தலைமையில் விதை ஆய்வாளர்கள் கரூர், பழனி, திண்டுக்கல், ஈரோடு, பவானி, கோபி, தாராபுரம், சத்தி மற்றும் காங்கேயம் குழு மூலமாக ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில்






உள்ள அரசு, அரசு சார்பு, தனியார் மற்றும் நர்சரி போன்ற விதை விற்பனை நிலையங்களில் சில தினங்களாக திடீர் ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வின் போது, விதை இருப்பு மற்றும் விதை விவர பலகை,விதை விற்பனை உரிமம், விதை இருப்பு பதிவேடு, விதை கொள்முதல் பட்டியல், பதிவுச்சான்று, முளைப்புத்திறன் அறிக்கை மற்றும் விற்பனை பட்டியல் ஆய்வு செய்யப்பட்டது.

திடீர் குழு ஆய்வு மொத்தம் 45 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டது. விற்பனை உரிமம், இருப்புபதிவேட்டிலுள்ள விதை இருப்பிற்கும், உண்மை இருப்பிற்கும் வேறுபாடு இருந்த விதைக்குவியல்கள், பதிவுச்சான்று இல்லாத விதைக்குவியல்கள், பதிவுச் சான்றின்படி இரக பதிவு அட்டையில் பதிவு செய்யாத விதைக் குவியல்கள் முளைப்புத்திறன் அறிக்கை இல்லாத விதைக் குவியல்கள் மற்றும் விதைகள் சரியான முறையில் சேமிக்காத விதைக்குவியல்கள் போன்ற விதைச் சட்ட விதிமீறல்கள் காணப் படும் 21 விதைக்குவியல்களுக்கு விற்பனை தடை விதிக்கப் பட்டது. விற்பனை தடை செய்யப்பட்ட விதைக் குவியல்களின் அளவு 4581 கிலோ, அதன் மதிப்பு ரூ.32.25 இலட்சம் ஆகும். மேலும் ஆய்வின் போது, விற்பனைக்காக இருப்பில் வைக்கப்பட்டிருந்த விதைக் குவியல்களில் 25 எண்கள், முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை பகுப்பாய்விற்கு விதை மாதிரிகள் எடுக்கப்பட்டன.

ஆய்வின் போது, விதை விற்பனை உரிமம் பார்வையில் தெரியும் படி மாட்டியிருக்க வேண்டும் என்றும், விதை இருப்பு மற்றும் விதை விவர பலகை தினமும் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், விதைகள் இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை பட்டியல்கள் முறையாக தினமும் பராமரிக்கப்படவும் எனவும், அனைத்து விதைகளுக்கு பதிவுச் சான்று மற்றும் முளைப்புத்திறன் அறிக்கை பராமரிக்கப்பட வேண்டும் எனவும், பதிவுச் சான்று புதுப்பித்த விதைகளை மட்டும் விற்பனை செய்ய வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும், விதைகள் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளுடன் சேர்த்து வைக்காமல் தனியாக சேமித்து விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், விதை ஆய்வு துணை இயக்குநர், பெ.சுமதி, பத்திரிக்கைக்கு அளித்த செய்தியில் விதைச்சட்டம் 1966, விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983, விதை விதிகள் 1968 மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955 ஆகியவற்றின கீழ் விதிமீறல் காணப்படும் விதை விற்பனை நிலையங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நெற்பயிரில் இலை சுருட்டுப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



தற்பொழுது தமிழ்நாட்டில் நெல் சாகுபடி செய்யபட்டுள்ள பெரும்பாலான பகுதிகளில் இலை சுருட்டுப்புழுவின் தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது.

## தாக்குதலுக்கு சாதகமான சூழ்நிலை

● காற்றில் அதிக ஈரப்பதம் (90 சதவீதத்திற்கு மேல்), குறைந்த வெப்பநிலை (25-30 டிகிரி செல்சியஸ்), இரவு நேர பனி மற்றும் மப்பும் மந்தாரமுமான காலநிலை ஆகிய தட்பவெப்ப காரணிகள் இலை சுருட்டு புழுவின் தாக்குதலுக்கு உகந்ததாக உள்ளது.

● தழைச்சத்து அதிகமாக இட்ட வயல்களிலும், நிழல் இருக்கும் பகுதிகளிலும் இப்பூச்சியின் தாக்குதல் மிகுந்து காணப்படும்.

● மிதமான வெப்பநிலை கொண்ட அக்டோபர் முதல் ஜனவரி மாதம் வரை இதன் தாக்குதல் மிக அதிகமாகக் காணப்படும்.

## தாக்குதலின் அறிகுறிகள்

● முட்டையிலிருந்து வெளிவரும் இளம் புழு உமிழ்நீர் கொண்டு உற்பத்தி பண்ணும் மெல்லிய பட்டு நூல் போன்ற இழைகளால் இலையை நீள்வாக்கில் சுருட்டி அல்லது இலையின் நுனிப்பகுதியை அடிப்பகுதியுடன் மடக்கி இணைத்து பின்னி அதற்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு பச்சையத்தை அரித்து உண்பதனால் பச்சையம் சுரண்டப்பட்ட பகுதிகள் வெண்மையாக மாறிவிடும். அதிகளவில் பாதிக்கப்பட்ட பயிரில் இலைகள் வெண்மையான சருகுபோல மாறும்.

● அதிக அளவு தாக்கப்பட்ட பயிரில் பயிர் வளர்ச்சி குன்றி மணி பிடிப்பதும் பாதிக்கப்படுகிறது.

● இந்தப் பூச்சி பயிரை எல்லா வளர்ச்சி பருவத்திலும் தாக்கக் கூடியது. பூக்கும் பருவத்தில் இவை தாக்கினால் கண்ணாடி இலைகள் பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பும் அதிகரிக்க ஏதுவாகிறது.

**இலை சுருட்டு புழுவின் வாழ்க்கை சரிதம்**

● அந்துப்பூச்சிகள் பல கிலோமீட்டர் தூரம் வரை பறந்து செல்லக் கூடியவை.



● பெண் அந்துப்பூச்சி இரவு நேரத்தில் வெள்ளை நிற தட்டையான 300 முட்டைகள் வரை தளிர் இலைகளின் அடிப்பரப்பில் அல்லது நடு நரம்பிற்கு இணையாக இடும்.

● முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுக்கள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் தென்படும். 25-30 நாட்கள் வரை நீடிக்கும் புழுப்பருவத்தில் சுமார் மூன்று முதல் நான்கு இலைகளை உண்ணும். இதன் வாழ்க்கைச் சுழல் 30-42 நாட்களில் முடியும்.

● அந்துப்பூச்சிகள் பழுப்பு கலந்த ஆரஞ்சு நிறத்திலும், இளம் பழுப்பு நிற இறக்கைகளுடனும் காணப்படும். முன் இறக்கை களில் கோடுகள் தென்படும். இறக்கைகளின் வெளி விளிம்பு களில் கரும்பழுப்பு பட்டை காணப்படும்.

● பறவைகளிடமிருந்து தப்பிக்க புல் மற்றும் நெல் பயிரின் உள்பகுதிகளில் மறைந்திருக்கும். ஒரு வருடத்தில் 3-5 தலைமுறைகள் தோன்றும்.

**பொருளாதார சேதநிலை**

1. பயிர்களின் ஆரம்ப வளர்ச்சி பருவத்தில் 10 சதவீத இலைகளில் சேதம்.

2. பூக்கும் பருவத்தில் 5 சதவீத இலைகள் பாதிக்கப்பட்டு இருத்தல்.

**பூச்சிக் கட்டுப்பாடு**

1. வயல் வெளிகளில் காணப்படும் சில புல் பூண்டுகள் இப் பூச்சிக்கு மாற்றுப் பயிராக காணப்படுவதால் புல் பூண்டுகளை அகற்றி, வயல்வெளிகளை சுத்தமாக பராமரிக்க வேண்டும்.

2. தழைச்சத்து உரத்தினை தேவைக்கு அதிகமாகவும் ஒரே தடவையில் மொத்தமாகவும் அளிக்கக்கூடாது. பூக்கும் பருவத்தில் அதிக அளவு தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். இலை வண்ண அட்டையை பயன்படுத்தி அல்லது தழைச்சத்தை 2-3 பாகமாகப் பிரித்து இடவேண்டும்.

3. விளக்குப்பொறி வைத்து அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும்.

4. ஒரு ஏக்கருக்கு 20 முதல் 25 வரை பறவை இருக்கைகள் அமைக்க வேண்டும். மூங்கில் குச்சிகளை 'T' வடிவத்தில் அமைத்தோ அல்லது தென்னை மட்டைகளின் அடிமட்டையை மேற்புறம் இருக்குமாறு 4 முதல் 5 அடி உயரத்திற்கு வயலில் ஆங்காங்கே ஊன்றி வைத்துவிட வேண்டும். இவ்வாறு பறவை இருக்ககள் இமைப்பதால் பூச்சிகளை பிடித்துண்ணும் பறவை களின் செயல்பாடு அதிகரித்து பூச்சிகளின் சேதத்தை குறைக்கும்.

5. வயலில் காணப்படும் தரை வண்டுகள்? ஒட்டுண்ணி குளவிகள்? நீள்கோம்பு வேட்டுக்கிளிகள்? நீர்த்தாண்டி? நீர் மிதப்போன்? தட்டான்கள்? இடுக்கிவால் பளுச்சிகள் முதலிய நன்மை சேய்பும் பளுச்சிகளைபும் மற்றும் சிலந்திகள் சூபான்ற உயிரினணு;களைபும் பாதுகாத்து பேருக்குதல் சூவண்டும்.

6. டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சிசி (40000 முட்டைகள்) என்ற அளவில் நட்ட 37, 44 மற்றும் 51வது நாள் என மூன்று முறை வெளியிட வேண்டும்.

7. தாவர பூச்சிக்கொல்லிகளான வேப்பங்கொட்டைச்சாறு 5 சத கரைசல் அல்லது அசாடிராக்ட்டின் 10000 பிபிஎம் ஏக்கருக்கு 200 மில்லி அல்லது பேசில்லஸ் துரின்ஜியன்சிஸ் என்ற எதிர் உயிரி பாக்டீரியத்தை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளவில் ஒட்டும் திரவத்துடன் சேர்த்து 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளைகளில் இலைகள் முழுவதும் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்;.

8. இலை சுருட்டு புழுவின் தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டும் பொழுது குளோரன்ட்ரானிலிபுரோல் 18.5 எஸ்.ஸி – 60 மிலி, கார்டாப்ஹைட்ரோகுளோரைடு 50 எஸ்.பி – 400 கிராம், ஃபுளுபெண்டியாமைடு 39.35 எஸ்.ஸி – 20 மிலி, ஃபுளுபெண்டியாமைடு 20 டபிள்யூ.ஜி – 50 கிராம், கார்போசல்பான் 25 ஈ.சி – 400 மிலி, டெட்ரானிலிபுரோல் 18.18 எஸ்.ஸி –100மிலி ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளில் ஏதாவது ஒரு மருந்தினை ஓர் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளைகளில் இலைகள் முழுவதும் நன்கு நனையுமாறு தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இதனை, முனைவர் இராஜா.ரமேஷ், பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் மற்றும் முனைவர் சு.மாரிமுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையம், வம்பன், புதுக்கோட்டை தெரிவித்தனர்.

# மழையால் பாதிக்கப்பட்ட நெல்லை விற்பனை செய்வது எப்படி?



டெல்டா மாவட்டங்களில் வரலாறு காணாத வகையில் கடந்த ஆண்டைவிட (3.80 லட்சம் ஏக்கர்) சாகுபடியை விட இந்த ஆண்டில் 6.34 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு கடந்த 20 தினங்களாக அறுவடை செய்யப்பட்டு பணி இன்னும் நடைபெற்று வருகிறது.



தற்போது வட கிழக்கு பருவ மழையும் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் ஏற்பட்ட மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் மணிகள் வயலிலே சாய்ந்து நீரில் மூழ்கியுள்ளன.

**அப்படிபட்ட நெல்லை எங்கே கொண்டு போய் விற்பனை செய்வது?**

விவசாயிகளுக்கு, தனியாரை விட, அரசின் கொள்முதல் நிலையங்களில் (DIRECT PROCUREMENT CENTRE) விலை அதிகமாக கிடைப்பதால் அறுவடை செய்யப்பட்ட நெல்லை விற்பனை செய்ய விவசாயிகள் நெல்லுடன் படையெடுத்து வருகின்றனர்.

**விலை விபரம் தெரியுமா?**

மத்திய அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையை விட மாநில அரசு ஊக்கத்தொகையும் சேர்த்து வழங்குகிறது.

சன்ன ரக நெல்லுக்கு 2389+156=2545/குவிண்டால்

சாதாரண ரக நெல்லுக்கு 2369+132=2501/குவிண்டால்

**டெல்டா மாவட்டங்களில் எத்தனை கொள்முதல் நிலையங்கள் உள்ளன?**

1825.

**நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை எப்படி விற்பனை செய்ய வேண்டும்?**

நெல் கொள்முதல் நிலையங்களில் 17% ஈரப்பதம் உள்ள நெல்லை தான் (MOISTURE METER) வாங்கப்படுகிறது. இதற்கு உரிய ஆவணங்களுடங்களுடன் (பட்டா உற்பத்தி அளவு) போன்றவற்றுடன் விவசாயிகள் கொண்டு வர வேண்டும்.

விவசாயிகளிடத்தில் நெல்லை வாங்கிய பின் கிடங்குக்கு அனுப்பி பின்பு லாரி மூலமாக அறுவை மில் (RICE MILL) அனுப்பப்பட்டு அரிசியாக்கி பின் அதில் செறிவூட்டப்பட்ட அரிசியை கலந்து மத்திய குடோனில் சேகரிக்கப்பட்டு விற்பனைக்கு வரும்.

## கொள்முதல் நிலையம் எப்போது உருவானது தெரியுமா?

தமிழகத்தில் 2001 முதல் இந்திய உணவுக்கழகம் சார்பில் ‘தமிழக அரசின் நுகர்பொருள் வாணிப கழகம் தான் கொள்முதல் செய்து வந்துள்ளன. அதற்கு பிறகு 1975 முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நேரடியாக நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளிடம் வாங்கப்படும் நெல்லை வாணிப கழகத்திற்கு சொந்தமான 21 அரிசி ஆலைகள் மற்றும் அதன் முகவர் களாக உள்ள 623 தனியார் ஆலைகள் மூலமாக அரிசியாக மாற்றப்பட்டு ரே கன் கடை வாயிலாக வழங்கப்படுகிறது.

## செறிவூட்டப்பட்ட அரிசி என்றால் என்ன? தெரியுமா?

பொதுவாக அரிசியில் மாவுசத்து மட்டுமே பிரதானமாக உள்ளது. இதனை தொடர்ந்து பயன்படுத்தி வருவதால் கர்ப்பிணி மற்றும் பெண்களுக்கு இரத்த சோகை ஏற்படுகிறது. இதை கண்ட மத்திய அரசு இந்த அரிசியுடன் இரும்பு சத்து உள்ளிட்ட ஊட்டசத்துகளை (வழக்கமான அரிசியில் 100 கிலோவிற்கு ஒரு கிலோ சத்துமிக்க செறிவூட்டப்பட்ட அரிசி (EN-RICHED RICE) கலந்து செறிவூட்டப்பட்ட அரிசியாக நியாய விலைகடை மூலமாக மக்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த அரிசி கடந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கப்படுகிறது.

## மழையால் பாதிக்கப்பட்ட நெல் மணிகளை எவ்வாறு விற்பனை செய்ய வேண்டும்?

1) அறுவடைசெய்யப்பட்ட நெல்மணிகளை டிரையர்கள் மூலமாக காயவைக்க வேண்டும்.

2) நெல்மணிகளின் ஈரப்பதத்தை 17%யிலிருந்து 22% யாக உயர்த்த வேண்டும். (இதற்கான அதிகாரப்பூர்வ நடவடிக்கை மாநில அரசால் எடுக்கப்பட்டு வருகிறது).

3) நெல்லை வாய்ப்புள்ள இடங்களில் உலர்த்திட வேண்டும்.

4) வயலில் தேங்கியுள்ள நீரை உடனடியாக வடித்து விட வேண்டும்.

5) அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள நெல்லுக்கு அரசு இழப்பீடாக வழங்கிட வேண்டும். உரிய பயிர் காப்பீட்டு இழப்பீடை அந்த காப்பீட்டு நிறுவனங்கள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பனை விதை நடவு தீவிரம்

சேலம், அக்.25



சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையம் வட்டாரத்தில் உள்ள அபிநவம் கிராமம் பாப்பான் ஏரியில் பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் பனை விதை நடும் பணி மேற்கொள்ளப் பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கண்ணன், வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம் கலந்து கொண்டார். ஆயக்கட்டு தலைவர் ஜெயராமன் தலைமையில், வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், ஆயக்கட்டு சங்க உறுப்பினர்கள் முன்னிலையில் பாப்பான் ஏரி கரையில் பனை விதை நடவு செய்யப்பட்டது.

வேளாண்மை அலுவலர் மௌலிதரன், துணை வேளாண்மை அலுவலர் ஞான ஜோதி முருகன், உதவி வேளாண்மை அலுவலர் செல்லமுத்து, ஆகியோர் கலந்து கொண்டு 550 பனை விதைகளை 24.10.25 அன்று நடவு செய்யப்பட்டது.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் 2600 எண்கள் இலக்காக பெறப்பட்டு பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் அபிநவம், கல்லேரிபட்டி, புத்திரகவுண்டன்பாளையம், பெத்த நாயக்கன்பாளையம் ஆகிய ஏரிகளில் நட திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாநில மரமான பனை மரத்தினை ஊக்குவிப்பதாகும். மேலும் நிலத்தடி நீரை பாதுகாக்க உதவும், கரையோர மண்ணரிப்பை தடுக்கவும், இயற்கை வளத்தை பாதுகாக்கவும் உதவுகிறது. பனைமரம் ஆனது விவசாயிகளுக்கு வருமானம் தரும் பயிராகும், குறைந்த பராமரிப்பு செலவு உடையதாகவும், முக்கியமான உணவுப்பொருட்களான நுங்கு, பனங்கருப்பட்டி, பனங்கிழங்கு போன்றவற்றைத் தந்து பாரம்பரிய வாழ்வாதாரத்திற்கு மிக முக்கியமான ஒன்றாக அமைகிறது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்** நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மழையினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை காக்கும் வழிமுறைகள்

இராமநாதபுரம், அக்.25

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் விவசாயிகளிடையே மழையினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை காக்கும் வழிமுறைகள் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

திருப்புல்லாணி மற்றும் மண்டபம் வட்டாரங்களில் தற்பாழுது பெய்து வரும் வடகிழக்கு பருவமழையினால் பல கிராமங்களில் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி உள்ளது. விவசாயிகள் தங்களது வயலில் தேங்கியுள்ள மழை நீரை வடிய வைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், தண்ணீர் வடியாத இடத்தில் விவசாயிகள் வடிகால் வசதியினை ஏற்படுத்தி நீரை வடிக்க வேண்டும்.

இளம்பயிர்கள் அதிக நாள் நீரில் மூழ்கி இருந்தால் தழைச்சத்து, துத்தநாகசத்து, குறைபாடு ஏற்பட்டு இளம் மஞ்சள் நிறமாக மாறும். அவ்வாறு மாறும் பட்சத்தில் தண்ணீரை வடித்தவுடன் 2 கிலோ யூரியா, ஒரு கிலோ துத்தநாக சல்பேட் உரத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும்.

பயிர் தண்டு உருளும் பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் தண்ணீர் தேங்கினால் 4 கிலோ டிஏபி உரத்தினை 10 லிட்டர் நீரில் முந்தைய நாள் மாலை வேளையில் கரைத்து ஊறவைத்து மறுநாள் வடிகட்டி அதனுடன் 2 கிலோ யூரியாவை 190 லிட்டர் நீரில் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

தண்ணீர் தேக்கத்தினால் பயிர்கள் வளர்ச்சி குன்றி காணப்பட்டால் தண்ணீரை வடித்த உடன் ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன் ஜிப்சம் 18 கிலோ மற்றும் வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ ஆகியவற்றை கலந்து ஒரு நாள் இரவு வைத்த பின் 17 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இடவும்.நெல் பயிர்கள் அதிக நாட்களுக்கு நீரில் மூழ்கி இருக்கும் பட்சத்தில் குருத்துப் பூச்சி, இலைசுருட்டுப்புழு, பச்சைத்தத்துப் பூச்சி, குலை நோய், இலை உறை கருகல் நோய் போன்ற பூச்சி நோய் தாக்குதல்

ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை கண்டறிந்து தகுந்த பூச்சி நோய் தடுப்பு நடவடிக்ககைகள் மேற்கொள்ள வேண்டும்.

தண்ணீர் தேங்கி இளம் பயிர்கள் அழுகிய நிலை ஏற்படும் பட்சத்தில் இருப்பில் உள்ள நாற்றுகளை கொண்டு இடை நடவு செய்ய வேண்டும். அல்லது அதிக குத்துகள் உள்ள பயிரை கலைத்து பயிர் இல்லாத இடங்களில் நடவு செய்யலாம் என திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தெரிவித்துள்ளார். மேலும் மிக முக்கியமாக விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள நெல் மற்றும் இதர ராபி பருவ பயிர்களை உடனடியாக பயிர் காப்பீடு செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

# உரங்கள் போதிய கையிருப்பு உள்ளது என வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

விருதுநகர், அக்.25

விருதுநகர் மாவட்டத்தில், தற்பொழுது பரவலாக வடகிழக்கு பருவமழை பெய்து விவசாயப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் 195 தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் 171 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் விநியோகிக்கப்படுகின்றன. மாவட்டத்தில் தற்போது யூரியா 1648 டன், டி.ஏ.பி 815 டன், பொட்டாஷ் 420 டன், காம்ப்ளக்ஸ் உரங்கள் 2325 டன், விவசாயிகளின் தேவைக்காக இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தற்போது வேளாண் பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் போதிய அளவில் இருப்பு உள்ளது.

மேலும், உரம் கிடைப்பதில் பிரச்சனை, இரசீது இல்லாமல் விற்பனை செய்வது, அதிக விலைக்கு விற்பனை செய்வது, பிற உரங்களை வாங்க கட்டாயப்படுத்துவது மற்றும் உரம் பதுக்கல் பற்றிய புகார்களைஅந்தந்த பகுதிகளுக்கான வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் விவசாயிகள் தெரிவிக்க லாம் என விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் தெரிவிக்கிறார்.

# அதிக மகசூலுக்கு சரியான பயிர் எண்ணிக்கை பராமரிப்போம்!

மனிதனின் ஆரோக்கியமான வாழ்விற்கு சமச்சீர் உணவு அவசியமாகிறது. தானியங்களிருந்து மாவு சத்தும் பயறு வகை பயிர்களிலிருந்து புரதசத்தும் எண்ணெய் வித்து பயிர்களிலிருந்து கொழுப்புச் சத்தும் வைட்டமின்கள் மற்றும் தாதுப் பொருட்கள் காய்கறிகள் மற்றும் பழங்களிலிருந்தும் கிடைக்கிறது.

புரதச்சத்து குறிப்பாக தாவர புரதச்சத்து பயறு வகை பயிர்களிலிருந்து தான் அதிகம் கிடைக்கப் பெறுகிறது. மேலும் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் போது மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. எனவே பயறு வகை பயிர்களின் சாகுபடியை அதிகரிப்பதுடன் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை அதிகரிப்பதும் அவசியமாகிறது.

பயறு வகைப் பயிர்களான உளுந்து, பாசிப்பயறு போன்றவைகள் நமது தூத்துக்குடி மாவட்டத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. அதிலும் குறிப்பாக மானவாரியில் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரி சாகுபடியில் பயிர் எண்ணிக்கை பராமரிப்பது மிக அவசியம். பயிர் எண்ணிக்கை குறைந்தால் மகசூல் பாதிக்கப்படும். அதிக மகசூல் பெறுவதற்கு ஒரு சதுர மீட்டருக்கு 35 செடிகள் இருக்குமாறு பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும்.

சரியான பயிர் எண்ணிக்கை பராமரிக்க விதையின் முளைப்புத் திறன் சரியான அளவில் இருக்க வேண்டும். உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு, போன்ற பயறு வகைப் பயிர்களுக்கு விதை முளைப்புத்திறன் 75 சதவீதம் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பயிர் முளைப்புத்திறனில் இயல்பான நாற்று, இயல்பற்ற நாற்று, கடினமான விதை, உயிரற்ற விதை என நான்கு வகைகள் உள்ளன.

இவற்றில் கடின விதை என்பது விதை உறைகளின் கடினத்தன்மை காரணமாக, நீர் உட்புக இயலாத காரணத்தினால் முளைவிடாமல் இருப்பது. இவை பின்னாளில் வயல்களில் முளைக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளது.

எனவே பயறுவகை பயிர்களில் கடின விதைகளின் எண்ணிக்கையும், இயல்பான நாற்றுகளின் எண்ணிக்கையோடு சேர்த்து முளைப்புத் திறனைக் கணக்கிட வேண்டும்.

ஆகவே விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் பயறுவகை விதைகளை விதைப்பதற்கு முன்பு விதை பரிசோதனை செய்து, விதைத்தால் சரியான பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் பெறலாம் என்று திருநெல்வேலி, விதைப்பரிசோதனை அலுவலர் ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் சேக் நூகு ஆகியோர் தெரிவிக்கிறார்கள்.




# சிவகாசி வட்டாரத்தில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய அழைப்பு

விருதுநகர், அக்.25

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்தில் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு பயிர்க் காப்பீடு செய்வது குறித்து சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இராமசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

விவசாயிகள் வறட்சி மற்றும் அதிக கனமழையினால் வெள்ளம் ஏற்பட்டு பயிர்களின் மகசூல் இழப்பீட்டினை தடுக்க தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு பயிர்க்காப்பீடு செய்வது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

சிவகாசி வட்டாரத்தில் விவசாயிகள் பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ராபி பருவத்தில் நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.491/- ஆகவும், மக்காச்சோளப் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.319/- ஆகவும், பருத்திக்கு ஏக்கருக்கு ரூ.473/- ஆகவும், பாசிபயறு, உளுந்து பயிர்களுக்கு முறையே ரூ.251/-, ரூ.252/- ஆகவும், கம்பு பயிருக்கு ரூ.160/- ஆகவும் மற்றும் சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.136/- என பீரிமியத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பயிர்களுக்கான காப்பீடுக்கான காலக்கெடு நாள் : உளுந்து, பாசிப்பயறுக்கு 15.11.25 எனவும், மக்காச்சோளம், கம்பு, பருத்தி முதலிய பயிர்களுக்கு 30.11.25 எனவும், நெற்பயிருக்கு 16.12.25 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே விவசாயிகள் தங்களது பட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் போன்ற ஆவணங்களுடன் தங்கள் பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலோ அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது பொது சேவை மையங்களின் வாயிலாக பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு சிவகாசி வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# இலவச திறன் சார்ந்த மண்புழு உரத் தயாரிப்பு பயிற்சி

கோயம்புத்தூர், அக்.25

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உழவியல் துறை சார்பில் தமிழக அரசின் 'வெற்றி நிச்சயம்', நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 26 நாட்களுக்கு 'இலவசதிறன் சார்ந்த மண்புழு உரத் தயாரிப்பு பயிற்சி' வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சி 30.10.25 முதல் 28.11.25 வரை நடக்கும். இப்பயிற்சி முகாமில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி, டிப்ளமோ, விவசாயிகள் மற்றும் பெண்கள் பங்கேற்கலாம். வயது வரம்பு 18 முதல் 35 வரை உள்ளவர்கள் பங்கேற்கலாம்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள், பேராசிரியர், உழவியல் துறை அவர்களை 94432 09452, 98425 62975 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அக்டோபர் 28ம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக்கு வரும் போது ஆதார் அட்டை நகலை எடுத்து வரவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.




# உழவரைத் தேடி வேளாண்மை நலத்துறை முகாம்



ராணிப்பேட்டை, அக்.25

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம், நெமிலி கிராமத்தில் உழவரைத் தேடி வேளாண்மை நலத்துறை முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் அருணாகுமாரி தலைமையில் நெமிலி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

அவர் பேசுகையில் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கி உள்ள நிலையில் கனமழை எச்சரிக்கை விடுத்துள்ளதால் எதிர்பாராத இயற்கை இடர்பாடுகள் மூலம் ஏற்படும் பயிர் சேதங்களின் இழப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ள விவசாயிகள் ராபி பருவத்திற்கான சம்பா நெற்பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்து பயன்பெற வேண்டும் என்றும் பயிர் காப்பீடு செய்ய வரும் நவம்பர் 15ஆம் தேதி கடைசி நாள் எனவும் நெல் பயிருக்கு பிரீமியம் தொகை ஏக்கருக்கு ரூ 545/. செலுத்தி விவசாயிகள் தங்களது சிட்டா, நடப்பு ஆண்டிற்கான பயிர் சாகுபடி அடங்கல், ஆதார் அட்டை, வங்கி கணக்கு புத்தகம் ஆகிய ஆவணங்களுடன் அனைத்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கிளைகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்களை அணுகலாம் என தெரிவித்தார். வேளாண்மை அலுவலர் திய்வ ஸ்ரீ உயிர் உரங்களை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்வது குறித்து செயல்விளக்கம் அளித்தார். தோட்டக்கலை துறை அலுவலர் ஜெயச்சந்திரன் மிளகாய், கத்திரி நாற்றுகள் மானியத்தில் கிடைப்பது குறித்தும், பழச்செடிகள் தொகுப்பு குறித்தும் பேசினார்.

உதவி வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் நெமிலி வேளாண்மை விரிவாக்க மையத்தில் இடு பொருட்கள் இருப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி அட்மா திட்ட கண்டுணர்வு பயணம், செயல் விளக்கங்கள் குறித்து பேசினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவித் தொழில்நுட்ப மேலாளர் ராமதாஸ் செய்திருந்தார். பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தரமான விதை உற்பத்தியாளர் பயிற்சி

கோயம்புத்தூர், அக்.25

கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, விதை மையம் மூலம் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் நீங்களும் ஆகலாம் தரமான விதை உற்பத்தியாளர்' என்ற தலைப்பில் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்த பயிற்சியில் பங்கேற்க ஆர்வம் உள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்பதிவு இன்று முதல் வரும் 27.10.25 தேதிக்குள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை பேராசிரியரை நேரிலோஅல்லது 99521 76477 என்ற கைபேசி எண் மூலம் அணுகி பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். மாவட்டத்தில் மொத்தம் 25 பேருக்கு இந்த பயிற்சி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு 26 நாட்கள் பயிற்சி தரப்படும்.

இந்த பயிற்சியின் போது, விதை உற்பத்தியாளராக தேவையான அனைத்து விவரங்களுமான விதைத் தேர்வு, சுத்திகரிப்பு, பயிர் பராமரிப்பு முறைகள், சான்றிதழ் பெறும் நடை முறைகள், விதை சேமிப்பு மற்றும் விற்பனை வழிமுறைகள் வழங்கப்படும்.

பயிற்சியில் பங்கேற்பதற்கு 18 முதல் 35 வயதிற்கு உள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயி களுக்கு அழைப்பு விடப்படுகின்றது. பயிற்சி முடிவில் பங்கேற் பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். இந்த அரிய வாய்பை பயன்படுத்திக் கொண்டு தரமான விதை உற்பத்தி செய்யும் றமையை வளர்த்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : ஆதார் அட்டை நகலை எடுத்து வரவும்.

# விவசாயிகளுக்கான ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது



திண்டுக்கல், அக்.25

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரம், அட்மா திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கான ஆலோசனைக் குழு கூட்டம் வேளாண்மைத் துறை மூலமாக வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி, ரெட்டியார் சத்திரம், அறிவுரையின்படி வட்டார தொழில்நுட்பக் குழு மற்றும் வட்டார விவசாயிகளுக்கான ஆலோசனை குழு கூட்டம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் அலுவலர் முருகானந்தம், துறை சார்ந்த திட்டங்களை விவசாயி களுக்கு எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் மணிகண்டன், வேளாண் துறையின் மானிய திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறினார். வேளாண் உதவி விதை அலுவலர் பூபதி, தரச் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி பயன்பெறுமாறு கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் பொன்ராம், துறை சார்ந்த திட்டங்களை பயன்படுத்த கூறி விதை தொகுப்புகளை விவசாயிகளுக்கு வழங்கினார். பட்டு வளர்ச்சித் துறை ஆய்வாளர் சிவமணி, பட்டு வளர்ப்பு முறைகள் அதன் மானிய திட்டங்கள் பற்றி விளக்கி கூறினார். கால்நடை பராமரிப்பு துறை அலுவலர் அவர் துறையை பயன்படுத்தி கொள்ளுமாறு கூறினார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர் மூர்த்தி, குளிர்பதன கிடங்கு களை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெறுமாறு கூறினார். மற்றும் கூட்ட இறுதியில் வேளாண் பொறியியல் அலுவலர் கங்கா, அவர்கள் துறையில் குறைந்த வாடகையில் இயந்திரங்களை பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு கூறி துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விளக்கி கூறினார். மேலும் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி, பண்ணைப்பள்ளி மற்றும் கருத்தரங்கு போன்ற திட்ட இனங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட இருப்பதால் விருப்பம் உள்ள விவசாயிகள் முன்பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

**DOCTOR OF ASTROLOGY**

**பா.இளங்கோவன்**

**M.Sc., MBA, D.Astro, Phd.,**

**ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்**



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

**தொடர்புக்கு 98420 07125**

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



**நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.**